ISSN - 2235-9796


12 பக்கங்கள் 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 03 ஏப்ரல் - 2014 இழை - 31



புனிதர்கள் 05

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 31 ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக் கிறீர்களா?

மனித வாழ்வு என்பது தனியே வெற்றிகளை மாத்திரம் கொண்ட நேரான கோடு அல்ல, மாறாக அது வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம் போன்றவை மாறி மாறி வருகின்ற வளைவுகள், சுழிவுகள் கொண்ட கோடுதான் மனித வாழ்க்கை.



கோயல் ராணா 08

வாழ்வில் வரும் வெற்றிகளில் மூழ்கி விடாமலும், தோல்வி களைக் கண்டு துவண்டு போகாமலும் வாழ்வில் வரும் தோல்விகளையும் வெற்றியாக மாற்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வாழ்க்கைத் தத்துவத்தினை விளங்குபவையாக சமய நிறுவனங்கள் திகழ்கின்றன.

இவை ஒரு மனிதனுக்கு உளவியல் ரீதியாக அமை தியை வழங்குகின்றன. மனித வாழ்வின் அர்த்தத்தை விளக்குபவையாக சமய நிறுவனங்கள் காணப்படுகின் றன. சமய நிறுவனங்கள் சமூக பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பவையாக அமைகின்றன.



விராட் கோஹ்லி 08

எனவே, ஒரு மனிதனின் வாழ்வு நெறிப்பட வேண்டுமானால் அவனிடம் மத நம்பிக்கை இருக்க வேண்டும். மத நம் பிக்கை கொண்ட மக்களால் தான் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். எனவே இறைவனுக்கு ஏற்றவர்களாக வாழ்ந்து சமூகத்தை நல்வழி வளப்படுத்துவோம்....

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளி லேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...


வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன...

- 'வலை' வீசல் தொடரும்...

நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ ஏப்ரல் - 01 - உலக முட்டாள் தினம்
- ✧ ஏப்ரல் - 05 - உலக கடல் தினம்
- ✧ ஏப்ரல் - 07 - உலக சுகாதார தினம்
- ✧ ஏப்ரல் - 08 - உலக நீர் தினம்
- ✧ ஏப்ரல் - 12 - உலக வான் பயண தினம்
- ✧ ஏப்ரல் - 16 - உலக முயற்சியாண்மை தினம்
- ✧ ஏப்ரல் - 17 - உலக ஈமோபீலியா தினம்
- ✧ ஏப்ரல் - 18 - உலக பரம்பரை தினம்
- ✧ ஏப்ரல் - 22 - உலக பூமி தினம்
- ✧ ஏப்ரல் - 24 - உலக ஆய்வுகூட விலங்குகள் தினம்
- ✧ ஏப்ரல் - 25 - உலக மலேரியா தினம்
- ✧ ஏப்ரல் - 28 - உலக தொழிலாளர் ஞாபகார்த்த தினம்
- ✧ ஏப்ரல் - 29 - உலக நடன தினம்
- ✧ ஏப்ரல் - 30 - உலக குழந்தைத் தொழிலாளர் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ ஆட்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இரண்டு ரோந்துப் படகுகளை அண்மையில் இலங்கைக்கு வழங்கிய நாடு எது?
**அவுஸ்ரேலியா**

❒ இவ்வாண்டு (2014) வெளியிடப்பட்ட சமூக வளர்ச்சி சுட்டியில் 132 நாடுகளில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பிடித்துள்ளது?
**85 ஆவது.**
இதேவேளை, முதலாவது - நியூசிலாந்து
இரண்டாவது - சுவிட்சர்லாந்து
மூன்றாவது - ஐஸ்லாந்து
இந்தியா 102 ஆவது இடத்திலும் உள்ளன.
அமெரிக்காவைச் சேர்ந்த Social Progress Imperative என்ற அமைப்பு வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சி சுட்டியிலிருந்து....

❒ இரண்டாம் உலகப் போரில் போராடிய இராணுவ வீரர் அண்மையில் கிளிநொச்சியில் மரணமானார். அவர் யார்?
**அமிர்தலிங்கம் குமாரசாமி (வயது-97)**

❒ இலங்கையின் முன்னணி ஆய்வு நிறுவனமான அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் ஆய்வாளர் குழுவொன்று கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நிகழ்த்திய ஆராய்ச்சிகளின் பயனாக சூழலுக்கு உகந்த உயிரியல் பசளையை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தைக் கண்டு பிடித்துள்ளது. அத்தொழில்நுட்பத்தின் பெயர்?
**Bio Fertilizer**

❒ அண்மையில் தனது 95 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இலங்கை சினிமாத்துறையின் முன்னோடி யார்?
**கலாநிதி வெஸ்டர் ஜேம் பீரிஸ்**

❒ அம்பாறை மற்றும் மட்டக்களப்பு நகரை இணைத்து மட்டக்களப்பு வாவி ஊடாக, 1870 மில்லியன் ரூபா செலவில் புதிய பாலம் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது. அப்பாலத்தின் பெயர் என்ன?
**புதிய மண்முனைப்பாலம்** (19.04.2014)

❒ இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய தொழிலாளர் மாநாட்டில் இலங்கை சார்பாக பங்குபற்றியவர் யார்?
**கே.வேலாயுதம்**
(இவர் தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராவார்)

❒ பனை அபிவிருத்திச்சபையினால் அண்மையில் என்ன வாரம் பிரகடனப் படுத்தப்பட்டது?
**பனை, கித்துள் வாரம்** (01-06-04-2014)

❒ குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் இலங்கையில் சிறந்த வங்கியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள வங்கி எது?
**கொமர்ஷல் வங்கி**

❒ அண்மையில் லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கையின் முதலாவது வணிக இலத்திரனியல் பத்திரிகை எது?
**Business e Paper**

❒ பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி அண்மையில் கொழும்பு வந்தார். அவர் யார்?
**ஜெனரல் ரஷாட் மஹ்மூத்**

- வாகனங்களைப் பொருத்தும் தன்னியக்க தொழிற்சாலை அண்மையில் ஜனாதிபதியால் எங்கே திறந்து வைக்கப்பட்டது?
  **பொல்கஹவெல (Automated Vehicle Assembling Plant)**

- ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்த மாதம் (ஏப்ரல்-23) எந்த நாட்டுக்குப் பயணமானார்?
  **பஹ்ரைன்**
  அந்நாட்டின் மன்னர் யார்? **அஹமாத் பின் இஸா அல் கலீபா**

- அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் எதிர்வரும் மே மாதம் நடை பெறவுள்ள சர்வதேச ஒருங்கிணைந்த மருத்துவம் மற்றும் சுகாதார ஆராய்ச்சியாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை யிலிருந்து செல்லவுள்ள ஒரேயொரு மாணவி யார்?
  **தௌபீக் றிப்கா ஜெஸ்மின்** (கிண்ணியா)

- நாட்டின் விரைவு தபால் சேவையில் முன்னிலையில் நிற்கும் மாவட்டம் எது?
  **யாழ்.மாவட்டம்**

- இலங்கையில் பெண் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான இடம் எதுவென இலங்கையின் சுற்றுலாச்சபை தெரிவித்துள்ளது?
  **தங்காலை**
  (இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊர் என்பது குறிப்பிடத்தக்கது)

- **“டெம்பஸ்ட் எக்ஸ்பிரஸ் – 24”** என்பது யாது?
  அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மற்றும் இலங்கை பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் பங்கெடுக்கும் பாதுகாப்பு சார் சர்வதேச பயிற்சிக் கருத்தரங்காகும்.
  இக்கருத்தரங்கு அண்மையில் (01.04.2014) கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

- **“நமக்காக நாம்”** என்பது யாது?
  இது படை வீரருக்கான வீடமைப்புத் திட்டத்தின் பெயராகும். அண் மையில் இத்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் படை வீரருக்கான வீடமைப்புத்திட்டம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

## இலங்கையில் இன்று இவர்கள்...

⌖ பிரதி உயர்கல்வி அமைச்சர் யார்?
**நந்திமித்ர ஏக்கநாயக்க**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◈ இயேசு கிறிஸ்துவின் இறுதி இராப்போசனத்தில் பயன்படுத்தப்பட்ட கிண்ணம் அண்மையில் எந்த நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது?
**ஸ்பெயின்** (அந்நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் கண்டுபிடிக்கப் பட்டது)

◈ எதிரிகளின் ஏவுகணைகளைத் தாக்கி அழிப்பதற்கு முன்னர், அவற்றின் பாதைகளை இனங்கண்டறியும் புதிய முப்பரிமாண ராடர் முறையை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ள நாடு எது? **பிரித்தானியா**

அவ் ஏவுகணையின் பெயர் என்ன?
**'ஆர்ரிஸன்'**

◈ 1982 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் அண்மையில் காலமானார். அவர் யார்?
**கப்ரியல் கார்சியா** (வயது-87)
"வன் ஹன்ட்ரட் இயர்ஸ் ஒவ் சொலிரூட்" என்ற நூலின் மூலம் (1967) பிரபல்யம் பெற்றார்.
இவர் இஸ்பானிய மொழி எழுத்தாளர் ஆவார்.

◈ உலகின் முதற் பெண்மணிகளின் மாநாடு எங்கே நடைபெற்றது?
**கோலாலம்பூரில்** (23.04.2014)

◈ குறுந்தூர ஏவுகணையை வெற்றிகரமாக ஏவி அண்மையில் பரிசோதனை செய்த நாடு எது? அந்த ஏவுகணையின் பெயர் என்ன?
**பாகிஸ்தான், ஹட்ப்-III**

◈ இவ்வாண்டு புனிதர்களாக பிரகடனம் செய்யப்பட்ட பாப்பரசர்கள் யார்?
- பாப்பரசர் **2ஆம் அருளப்பர் சின்னப்பர்**
- பாப்பரசர் **23 ஆம் அருளப்பர்**



◇ தொடர்ந்தும் ஆறாவது முறையாக முதல் தர வங்கியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வங்கி எது?
**இலங்கை வங்கி**

◇ 470 தினங்களுக்கு மேல் பூமியைச் சுற்றி உலக சாதனை படைத்த அமெரிக்க விண்வெளி விமானத்தின் பெயர் என்ன?
**எக்ஸ் - 37பி**

◇ உலக அளவில் அனிமேஷன் திரைப்படமொன்று வசூலைக் குவித்து சாதனை படைத்தது. அந்திரைப்படத்தின் பெயர் என்ன?
**"பிரோசன்"**

◇ 1939 இல் போலந்தின் தேசிய அருங்காட்சியகத்தில் களவாடப்பட்ட ஓவியத்தை திருப்பிக் கையளித்துள்ள நாடு எது?
**ஜேர்மனி**

◇ மிகப் பழமையான வானிலை அறிக்கை கல்வெட்டு அண்மையில் எந்த நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது?
**எகிப்தில்**

◇ முதல் நிலவு பயணத்தின் முக்கிய பொறியியலாளர் அண்மையில் காலமானார். அவர் யார்?
ஜோன் ஹோபோல்ட் (வயது-95)

◇ சவூதி அரேபியாவில் 1000 மீற்றர் உயரத்தில் உருவாகும் உலகின் மிக உயரமான கட்டடத்தின் பெயர் என்ன?
**"கிங்டம் ரவர்"**

◇ கமராவில் கண்காணிப்பதற்கு நாங்கள் எலிகளா? எனக் கேட்ட கல்லூரி ஆசிரியர்கள் யார்?
**இங்கிலாந்து ஆசிரியர்கள்**

◇ சொற்கள் அதிகரித்துவிட்ட காரணத்தினால் அதன் பதிப்பினை நிறுத்தி இணையத்தளத்தில் மட்டும் வெளியிடப்படவுள்ள அகராதி எது?
**ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி** (Oxford English Dictionary)

◇ ஜப்பான் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு போர்க் கப்பல்கள்

அண்மையில் கொழும்பு வந்தன. அக்கப்பல்களின் பெயர் யாது?

**- Inazumad 105**

**- Umigiri 158**

◇ "எபோவா" வைரஸ் காய்ச்சலினால் 80 பேர் அண்மையில் உயிரிழந்தது எந்த நாட்டில்?
கினியா

◇ உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நாடுகளில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
செக் குடியரசு
இதேவேளை, இலங்கை நான்காவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

◇ அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி உலகின் சிறந்த இடங்களில் முதலிடம் பிடித்த நகரம் எது?
டுபாய்

◇ பெண்களை மரியாதையாக நடத்தும் நாடுகளில் முதலிடத்தைப் பெற்றுள்ள நாடு எது?
ஐக்கிய அரபு இராச்சியம்

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ ரஷ்யா நாட்டின் பிரதமர் யார்?
தமித்ரி மெட்வேடேவ்

◎ பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமர் யார்?
மானுவேல் வல்ஸ்

◎ வடகொரியாவின் புதிய தலைவர் யார்?
கிம் யொங் உன்

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ இந்த ஆண்டு (2014) சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட வீரர் யார்? செபஸ்டியன் வெட்டல்

⊙ நடப்பாண்டில் சிறந்த விளையாட்டு வீரருக்கான ஆசிய விருதினை வென்ற வீரர் யார்?
**மகேந்திரசிங் டோனி**

⊙ சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.ஐ.சி) 5 ஆவது உலக இருபது 20 கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி எது?
**இலங்கை**
மேற்படி போட்டியில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் யார்?
**விராட் கோஹ்லி**

⊙ இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் புதிய தலைவி யார்?
**சாமரி அத்தப்பத்து**

⊙ மகளிருக்கான 4 ஆவது சர்வதேச இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த மார்ச் 2014 எந்த நாட்டில் நடைபெற்றது?
**பங்களாதேஷ், சிலெட் நகரில் நடைபெற்றது.**

⊙ உலக இருபது 20 கிரிக்கெட் போட்டிகளின் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ள அணி எது?
**இந்தியா**

⊙ மிக அதிக வயதில் (49) உலக குத்துச்சண்டை சம்பியன் பட்டத்தினை வென்ற வீரர் யார்?
**பேர்னாட் ஹோப் கின்ஸ்**

## உலக நாட்டு அழகுராணிகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✦ 2014 ஆம் ஆண்டுக்கான பெமினா மிஸ் இந்திய அழகிப் போட்டியில் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
கோயல் ராணா (டில்லி)

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ சிறந்த சேவை, உயர் முகாமைத்துவத்திற்கு ஐ.எச்.பி.எம். விருது கிடைக்கப்பெற்ற இலங்கையின் வைத்தியசாலை எது?
**அம்பாறை பொது வைத்தியசாலை**
(அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சுகாதார மற்றும்

உற்பத்தித்திறன் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச நிலையமே மேற்படி விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது)

❖ பொதுச்சேவை ஊடகவியலுக்கான 2014 "புலிட்ஸர்" விருதினைப் பெற்றுக்கொண்ட பத்திரிகைகள் எவை?

- **கார்டியன்**
- **வாஷிங்டன் போஸ்ட்**

இதேவேளை, கென்யாவில் வெஸ்ட்கேட் கடைத் தொகுதியில் இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் போது புகைப்படமெடுத்த நியூ யோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் புகைப்படக் காரருக்கு இவ்வாண்டுக் கான சிறந்த புகைப்படக் கலைஞருக்கான புலிட்ஸர் விருது வழங்கப் பட்டது. அவர் யார்?

**ரைவர் ஹிக்ஸ்**

இப்புலிட்ஸசர் விருது கொலம்பிய ஊடகவியல் பல்கலைக்கழக பாடசாலையால் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

❖ 2014 ஆம் ஆண்டுக்கான "புலிட்ஸர்" பரிசைப் பெற்றுக்கொண்ட இந்திய வம்சாவளிக் கவிஞர் யார்?

**'விஜய் சேஷாத்ரி'**

இவர் எழுதிய '3 Scetions' என்ற கவிதைத் தொகுப்புக்கு 98 ஆவது புலிட்ஸர் பரிசு கிடைக்கப்பெற்றுள்ளது.

❖ பஹ்ரைன் நாட்டுக்கு அண்மையில் விஜயம் (ஏப்ரல்-23) செய்த ஜனா திபதிக்கு அந்நாட்டினால் வழங்கப்பட்ட அதியுயர் அரச விருது எது?

**கலீபா பதக்கம் விருது**

❖ இவ்வாண்டு (2014) சிறந்த வர்த்தக விற்பனையகத்துக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் எது?

**ஒரேஞ் எலெக்ரிக்கல்ஸ்**

❖ 2013 ஆம் ஆண்டு சிறந்த வீரருக்கான ஆசிய விருது யாருக்கு வழங்கப்பட்டது?

டோனி

////////////////////////////////////////////////////////////////////////////////

- 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளைப் பெற்றுக்கொண்ட தென்னிந்தியத் திரைப்படங்கள் எது?
  - **தங்க மீன்கள்**
  - **தலைமுறைகள்**
  - **வல்லினம்**

- 2014 ஆம் ஆண்டுக்கான சமூக வலுவூட்டலுக்கான சர்வதேச விருதினை வென்றுள்ள வங்கி எது?

  **கொமர்ஷல் வங்கி**

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

- திருநங்கைகளை 3 ஆம் பாலினமாக அங்கீகரித்துள்ள நாடு எது?
  **இந்தியா**

- இந்திய கடற்படையின் தற்போதைய புதிய தளபதி யார்?
  ராபின் தோவன் (17.04.2014 இல் பதவியேற்றார்)

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

- இலங்கையில் செய்மதி ரேடார் நிலையம் எங்கு காணப்படுகின்றது?
  **திருகோணமலை**

- உலகிலுள்ள மக்களுக்கு ஏற்படும் தொண்டை அழற்சி நோய்களுள் 40 வீதத்துக்கும் அதிகமானவை எந்தக் காரணியால் ஏற்படுகிறது?
  **நீரினால்**

- உலகின் முதன் முதலாக உத்தியோகபூர்வமாக தபால் தலையை வெளியிட்ட நாடு எது?
  **பிரித்தானியா**
  பிரித்தானிய மகாராணியின் தலை பொறிக்கப்பட்ட முத்திரையாகும்.

- இடிஅமீன் எந்த நாட்டை ஆட்சி செய்தார்?
  **உகண்டா** (2013 இல் சவூதி அரேபியாவில் இறந்தார்)

- ஆங்கில இலக்கியத்தின் அமரகவி எனப்படுபவர் யார்?
  **ஷேக்ஸ்பியர்**

⌖ E-Mail ஐக் கண்டுபிடித்த தமிழர் எனப்படுகிறது. அவர் யார் தெரியுமா?
வி.ஏ.சிவா ஜயாத்துரை (தமிழ்நாடு)

⌖ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது சினிமாஸ் கோப் திரைப்படம் எது?
"காகஸ் கீ பூர்" (1959)

⌖ யோகர் சுவாமிகளின் எத்தனையாவது குருபூசை தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது?
50 ஆவது

⌖ பிளாஸ்டிக் நாணயத் தாள்கள் முதல் முதலில் எந்த நாட்டில் அச்சடிக்கப்பட்டன?
1968 இல் அவுஸ்ரேலியாவில்
2010 இல் இந்தியாவில் சோதனை முயற்சியாக சில நரகங்களில் மட்டும் 10 ரூபா நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டன. கனடா, சிங்கப்பூர் உட்பட 30 நாடுகள் பிளாஸ்ரின் நாணயத்தாள்களைப் பயன்படுத்தி வருகின்றன.

⌖ இலங்கையில் முதன் முதலில் திறக்கப்பட்ட பெண்கள் பாடசாலை எது?
உடுவில் மகளிர் வித்தியாலயம்

⌖ எந்த நாட்டில் முதன் முதலில் கண் வங்கி ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா?
இலங்கை

⌖ வருடந்தோறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நாடு எது?
சுவிற்சர்லாந்து

⌖ ஒரு மாகாண சபையின் பதவிக்காலம் எவ்வளவு?
5 வருடங்கள்

---

## வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

**சந்தா விபரம் - Delivered to Your Home**

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road, Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**50/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 250/- மட்டுமே.**


## உலகின் மிகப்பெரிய வாக்களிப்பு...




உலகின் மிகப்பெரிய வாக்களிப்பாகக் கருதப்படும் இந்தியாவின் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2014 ஏப்ரல் தொடக்கம் 2014 மே 12 வரை ஒன்பது பாகங்களாக நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் 814.5 மில்லியன் தொடக்கம் 100 மில்லியன் வரையான மக்கள் வாக்களிப்பதுடன் 2014 மே 16 ஆம் திகதி வாக்கென்னல் நடைபெறவுள்ளது.

இத்தேர்தல் 543 ஆசனங்களைப் பூர்த்தி செய்வதற்காக நடைபெறுவதுடன், அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கு ஆகக்குறைந்தது 272 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் ராகுல் காந்தியும், பாரதீய ஜனதா கட்சியில் நரேந்திர மோடியும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### உங்கள் பார்வையில் வலை...

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக் கப்படும்.

## நுண்ணறிவு – IQ

மாதாந்தம் வெளியிடப்படும் இப் பொது அறிவுத் தொகுப்புடன் நுண்ணறிவு வினா-விடையினையும் சிறிதளவு சேர்த்து வெளியிட்டால் என்ன? என்று வாசகர்களால் கோரிக்கைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கோரிக்கை எனக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. எனது நலன் அல்ல, உங்கள் நலன் கருதி சற்று முயற்சி எடுக்கிறேன். இருந்தபோதும் நீங்கள் படித்துச் சுவைத்துச் செய்து பார்த்த நுண்ணறிவு விடயம் ஒன்றோ இரண்டோ ஏனையவர்களின் நன்மை கருதி எனக்கு அனுப்பி வையுங்கள். வலையில் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.

வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com